## விலை பொருள் சேவை (வி பொ சே) வரி செயல்படுகிற முறை
## - ஒரு டிவி பெட்டி விற்பனையிலிருந்து 5% வி பொ சே வரி எவ்வாறு பெறப்படுகிறது என்பதற்கான ஒரு விளக்கம்




வருவாய் ஆணையம் திரட்டிய வி பொ சே வரி
= $5 - $5 + $10 - $10 + $15 = $15

[$5+$10+$15 இப்படி அல்ல]

வருவாய் ஆணையம் திரட்டிய வி பொ சே வரி
= $5 - $5 + $10 = $10

[$5+$10 இப்படி அல்ல]

குறிப்புகள்:

அ-வுக்கு விளக்கம்

டீவி விற்பனையாளர் அ, பயனீட்டாளரிடமிருந்து 5% வி பொ சே வரியாக $15 வசூலிப்பார். அவர் ஏற்கனவே டீவி தயாரிப்பாளருக்கு இவ்வரியாக $10 கட்டியிருக்கிறார்.

டீவி விற்பனையாளர் அ, இந்த $10 வரியை அவர் வசூலிக்கிற $15 வி பொ சே வரியிலிருந்து கழித்துக் கொள்ளலாம். எனவே, அவர் நிகர வரித்தொகையாக ($15-$10) 5 வெள்ளியை உள்நாட்டு வருவாய் ஆணையத்திடம் கட்டுகிறார்.

இது போல, டீவி தயாரிப்பாளர் வி பொ சே வரியாக $10 வசூலிக்கிறார்; அதில் உள்ளீட்டுப் பொருளுக்கான வி பொ சே வரியான $5 போக எஞ்சிய 5 வெள்ளியை வருவாய் ஆணையத்திடம் கட்டுகிறார்.

டீவி உறுப்புகளை வினியோகம் செய்பவர், டீவி தயாரிப்பாளரிடமிருந்து வசூலிக்கிற $5 வரியையும் வருவாய் ஆணையத்திடம் செலுத்துகிறார்; ஏனெனில் அவருடைய உள்ளீட்டுப் பொருள்கள் மீது வி பொ சே வரி இல்லை.

இந்த டீவி பெட்டி விற்பனை முலம் வருவாய் ஆணையம் வசூலிக்கிற மொத்த வரிப்பணம் $15. இது, கடைசிப் பயனீட்டாளர் செலுத்துகிற வி பொ சே வரித்தொகை.

ஆ-வுக்கு விளக்கம்

ஒரு மில்லியன் வெள்ளிக்குக் குறைவாகத் தொழில் செய்கிற சிறு-நடுத்தர வணிகர் ஆ, வி பொ சே வரிக்குப் பதிந்துகொள்ள வேண்டியதில்லை (தன்னிச்சையாக இவ்வாறு செய்தாலன்றி).

டீவி சில்லறை விற்பனையாளர் அ-வைப் போல் சிறு-நடுத்தர வணிகர் ஆ-வும் டீவி தயாரிப்பாளருக்கு வி பொ சே வரியைச் செலுத்த வேண்டும். சிறு-நடுத்தர வணிகர் ஆ பதிந்து கொள்ளாதவராக இருப்பதால், அவர் உள்ளீடுகளுக்கான $10 வி பொ சே வரித்தொகையை வருவாய் ஆணையத்திடமிருந்து திரும்பப் பெற முடியாது. ஆனால் இந்த 10 வெள்ளியை டீவி பெட்டி விற்பனை விலையில் அவர் சேர்க்க முடியும்.

வி பொ சே வரிச் செலவைத் திரும்ப அடைய, சிறு-நடுத்தர வணிகர் ஆ, தன் பயனிட்டாளரிடமிருந்து $310 பெறலாம். இது, சில்லறை விற்பனையாளரின் விலையான 315 வெள்ளியை விட $5 குறைவு. டீவி விற்பனையாளர் அ அடைகிற $100 வித்தியாசத் தொகை போலவே சிறு-நடுத்தர வணிகர் ஆ-வும் அடைகிறார்.